In the Court of the I Additional District Judge, I Additional District Court, Namakkal.

O.S. No.280/2021 நாள் : 01.06.2026 Time 03.30 PM

வா.சா.1 (தங்கராஜ்) அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு 3–ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி –

இந்த வழக்கில் 3–ம் பிரதிவாதி தரப்பில் கூடுதல் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டு கூடுதல் ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ள விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. அதற்கு என் தரப்பில் பதில் வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் இல்லை. நான் எந்த பதில் வழக்குரையிலும் கையொப்பம் செய்து கொடுக்கவில்லை. நானும், 1–ம் பிரதிவாதி முத்துசாமி வழக்கறிஞர் திரு.இளங்கோ என்பவரை வைத்து வழக்கு நடத்தி வருகிறோம். நாங்கள் இருவரும் சேர்ந்துதான் வழக்கு தாக்கல் செய்யுமாறு வழக்கறிஞர் திரு.இளங்கோவிடம் கொடுத்தோமா என்றால் ஆமாம். எனக்கும், 1–ம் பிரதிவாதி முத்துசாமிக்கும் சேர்த்துதான் வழக்கறிஞர் திரு.இளங்கோ நாளதுவரை வழக்கு நடத்தி வருகிறார் என்றால் சரிதான். இன்று முத்துசாமி வரவில்லை. முத்துசாமியின் பேரன் கதிரேசன் நீதிமன்றத்திற்கு வந்துள்ளார். நானும், என் மகனும், மருமகளும், கதிரேசனும் இன்று நீதிமன்றத்திற்கு வந்துள்ளோம். வழக்கு தாக்கல் செய்வதற்கு ஒரு வருடத்திற்கு முன்பியிருந்து எங்கள் குடும்பத்திற்கும், முருகேசன் குடும்பத்திற்கும் சரியான பேச்சுவார்த்தை இல்லை. அதனால் வழக்கு தாக்கல் செய்வதற்கு ஒரு வருடத்திற்கு முன்பியிருந்து நல்லது, கெட்டது எதுவும் இல்லை என்றால் சரிதான். முத்துசாமி குடும்பத்திற்கும்,

முருகேசன் குடும்பத்திற்கும் பேச்சுவார்த்தை உள்ளதா என்றால் இல்லை. இந்த வழக்கில் என்ன பரிகாரம் கேட்டுள்ளேன் என்பது எனக்கு தெரியுமா என்றால் தெரியும். பாகப்பிரிவினைக்காக வழக்கு தாக்கல் செய்துள்ளேன். வேறு எந்த பரிகாரமும் கேட்கவில்லை. இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு வழக்கறிஞர் திரு.இளங்கோ அவர்கள் மூலம் தினசரி நாளிதழில் 18.12.2019ல் ஒரு பொது அறிவிப்பு கொடுத்திருந்தேனா என்றால் ஆமாம். அந்த பொது அறிவிப்பில் கண்டுள்ள சொத்திற்குதான் வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஆமாம். அந்த அறிவிப்பில் கண்டுள்ள முழு சொத்திற்கும் நான் வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 27.09.1993ல் 1–ம் பிரதிவாதி பெயரில் ஒரு கிரைய பத்திரம் ஏற்பட்டது என்றும், அதன் பதிவு நகல்தான் என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணம் என்றால் சரிதான். அது பி.வா.சா.ஆ.2 ஆகும். 13.07.1992ல் 1–ம் பிரதிவாதி பெயரில் ஒரு கிரைய பத்திரம் ஏற்பட்டது என்றும், அதன் பதிவு நகல்தான் என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணம் என்றால் சரிதான். அது பி.வா.சா.ஆ.3 ஆகும். 17.02.2024 தேதியில் சிறு, குறு விவசாயிக்கான சான்றிதழ் எனக்கு வழங்கப்பட்டுள்ளது என்றும், அதற்கான நகல்தான் என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணம் என்றால் சரிதான். அது பி.வா.சா.ஆ.4 ஆகும். அந்த சான்றிதழை நான் அரசிடம் மனு கொடுத்து பெற்றேன் என்றால் சரிதான். அந்த மனுவில் கண்டுள்ள சொத்துக்கள் என்னுடைய அனுபவத்தில் உள்ளது என்றும், அதனால்தான்

எனக்கு அந்த சான்றிதழ் வழங்கப்பட்டது என்றால் சரிதான். அந்த சான்றிதழை வைத்துதான் காதப்பள்ளி கூட்டுறவு சங்கத்தில் பல ஆண்டுகளாக கடன் பெற்று வருகிறேன் என்றால் சரிதான். 15.03.2019 தேதியில் 1) கருப்பண்ண கவுண்டர் மக்கள் சடையப்ப கவுண்டர் மகன் தங்கராஜ், 2) முத்துசாமி, 3) முத்துசாமி மகன் சின்னதுரை, 4) தங்கராஜ் மகன் பொன்னரசன், 5) ஆறுமுகம், 6) ஆறுமுகம் மகன் முருகேசன், 7) பாப்பாத்தி மகள் காளியம்மாள் எல்லோரும் சேர்ந்து முச்சலிக்கா எழுதி கையொப்பம் செய்துள்ளோம் என்றால் சரிதான். காதப்பள்ளி கிராமத்தில் எனது தகப்பனார் மற்றும் முத்துசாமி, ஆறுமுகம் ஆகியோர்களுக்கு கூட்டாக கிராம நத்தத்தில் மனை உள்ளது என்றால் சரிதான். அந்த மனை 30 காதப்பள்ளி கிராமத்தில் பழைய சர்வே எண்.193/2, புதிய சர்வே எண்.193/3ல் உள்ளது என்றால் சரிதான். அந்த மனை 0.0713.0 சதுர மீட்டர் என்றால் சரிதான். அதில் ஒரு வில்லை வீடும், ஒரு தார்சு வீடும் உள்ளது என்றால் சரிதான். அதில் இருந்த கூரை வீட்டை அப்புறப்படுத்திவிட்டு தார்சு வீடு கட்டி குடியிருக்கிறேன். தார்சு வீடு கட்டி சுமார் 25 ஆண்டுகள் இருக்கும். தார்சு வீட்டில் நான் குடியிருக்கிறேன். வில்லை வீடு எல்லோருக்கும் பொதுவானது, அதை நான் அனுபவித்து வருகிறேன். இந்த வில்லை வீடு, தார்சு வீடு ஆகியவைகளை பிராதில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. நான் இந்த சொத்துக்களை பிராதில் சொல்லவில்லை என கூடுதல் பதிலுரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது

என்றால் சரிதான். என் தாயார் பெயர் கண்ணியம்மாள். அவருடைய பெயரில் ஒரு கிரைய பத்திரம் உள்ளது என்றால் சரியல்ல. என் தாத்தா பெயர் கருப்பண்ண கவுண்டர். என் பாட்டி பெயர் பாவாயி அம்மாள். அவர் பெயரில் ஒரு சொத்து உள்ளது. கருப்பக்கவுண்டர், பாவாயி ஆகியோர்களுக்கு சடைய கவுண்டர் என்கிற பொன்னையா கவுண்டர், முத்துசாமி, ஆறுமுகம் ஆகியோர்கள் வாரிசுகள் என்றால் சரிதான். என் பாட்டி பாவாயி பெயரில் உள்ள சொத்து சுமார் 1–1/2 ஏக்கர் ஆகும். அது தாளம்பாடி கிராமத்தில் உள்ளது. அந்த பாவாயின் சொத்தை இந்த வழக்கில் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. பாவாயி பெயரில் உள்ள சொத்திற்கு தனியாகத்தான் வழக்கு தாக்கல் செய்ய வேண்டும் என்றும், கூட்டுக்குடும்ப சொத்தாக அந்த சொத்தை இந்த வழக்கில் சேர்க்கமுடியாது என்றால் சரிதான். 15.03.2019 ல் ஏற்பட்ட முச்சலிக்காபடி பாகப்பத்திரம் ஏற்படுத்திக்கொண்டோமா என்றால் இல்லை. 27.09.1993 மற்றும் 13.07.1992 தேதியில் 1–ம் பிரதிவாதி முத்துசாமி பெயரில் குடும்ப கர்த்தா என்கிற முறையில் பெறப்பட்ட கிரைய பத்திரங்களில் கண்டுள்ள சொத்துக்களை இந்த வழக்கில் சேர்க்காமல் தாக்கல் செய்துள்ள இந்த வழக்கு சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. முத்துசாமி பெயரில் ஏற்பட்ட கிரைய சொத்தையும் சேர்த்துதான் வா.சா.ஆ.26 பொது அறிவிப்பு கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள இந்த வழக்கிற்கு வழக்கு மூலம் இல்லை என்றும், இந்த வழக்கு சட்டப்படி

நிலைக்கத்தக்கதல்ல என்றும், இந்த வழக்கு தள்ளுபடி ஆக வேண்டும் என்றும் சொன்னால் சரியல்ல.

(விசாரணை முடிந்த நேரம் 04.00 PM)